**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.**

**MCOP.No. 134/2019**

**PW.3.**

*****

2026ம் ஆண்டு ஜீலை திங்கள் ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1983ம் ஆண்டின் 105-வது சட்டம் ஏற்பாட்டின் படி திருமதி.S. மோகன ரம்யா., பி.ஏ., பி.எல்., தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: கருணாநிதி** | **தகப்பனார் பெயர்** | **: ஜெயராமன்** |
| **கிராமம்** | **:** | **தாலுகா** | **: மதுரை** |
| **தொழில்** | **: மருத்துவ பதிவேடு அலுவலர்** | **வயது** | **: 58/2026** |

---

**முதல் விசாரணை**

03.07.2026

நான் தற்போது அரசு சிவகங்கை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துபதிவேடு அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் நீதிமன்றத்தில் அழைப்பானை பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எங்களது மருத்துவமனையில் நாகேஸ்வரி க.பெ. விஜயகுமார் என்பவர் 27.01.2017ம் அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 22.02.2017 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார். அவரது அசல் சிகிச்சை கோப்பினை தாக்கல் செய்கிறேன். அந்த **அசல் சிகிச்சை கோப்பு ம.சா-ஆ. 11 (வரிசை )** ஆகும் .

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

Adda

மனுதாரருக்கு எதற்கான எவ்வகையான காயத்திற்கு சிகிச்சை அளிக்கப்பட்டதற்கான விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆவணங்கள் பார்த்து தெரிந்துகொண்டேன். மனுதாரர் நாகேஸ்வரிக்கு ஏற்பட்ட காயங்கள் சாதரணமா அல்லது கொடுங்காயமா என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட சிகிச்சை காலத்திற்கு பிறகு தொடர்ச்சிகிச்சைக்காக எங்களது மருத்துவமனைக் மனுதாரர் வந்ததிருந்தாரா என்றால் தொடர்ச்சிகிச்சைக்காக வந்தராஎன்ற விபரம் எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**
**சிவகங்கை.**